**செ. கு. எண்: 032** **நாள் : 28.01.2016**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 28.1.2016

14.8.2015 அன்று திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், ஏரிப்பாளையம் பகுதியைச் சேர்ந்த திரு. மணிகண்டன்;

2.9.2015 அன்று சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் வட்டம், சோமநாதமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கனகராஜ்;

5.9.2015 அன்று கோயம்புத்தூர் மாவட்டம், கணியூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. கந்தசாமி;

26.9.2015 அன்று சென்னை, மயிலாப்பூர் வட்டம், எம்.ஆர்.சி. நகரைச் சேர்ந்த திரு. ரமேஷ்;

27.9.2015 அன்று சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கோலநாயக்கன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. மாரியப்பன்;

31.10.2015 அன்று திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், மேலகரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆறுமுகசாமி;

-- ஆகிய தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத் தொழிலாளர்கள் பணியிலிருக்கும் போது மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

10.8.2015 அன்று விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், துத்திப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த திரு. சந்தோஷம் என்பவரின் மகன் சின்னப்பன்;

16.8.2015 அன்று வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், குக்கலப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த திரு. கோவிந்தசாமி மற்றும் திருமதி கண்ணம்மாள்;

கோயம்புத்தூர் மாவட்டம், வதம்பச்சேரி கிராமத்தைச் சேர்ந்த திரு. ரங்கசாமி என்பவரின் மகன் திரு. பிரவீன் குமார்;

21.8.2015 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், பள்ளிக்கரணை கிராமத்தைச் சேர்ந்த திரு. பழனி என்பவரின் மகன் சுப்ரமணி;

22.8.2015 அன்று திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், பேரளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ரத்தினம் என்பவரின் மகன் கோவிந்தசாமி;

23.8.2015 அன்று சென்னை, ஏழுகிணறு பகுதியைச் சேர்ந்த திரு. ஜெகதீஷ் என்கிற ஜெகஜி;

24.8.2015 அன்று விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், ஒட்டம்பட்டு கிராமத்தைச் சேர்ந்த திரு. ராமய்யா என்பவரின் மகன் பூங்காவனம்;

6.9.2015 அன்று கிருஷ்ணகிரி மாவட்டம், நரணிக்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கோவிந்தன் என்பவரின் மகன் மதன்குமார்;

–– ஆகியோர் மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

பல்வேறு நிகழ்வுகளில் மேற்கண்ட தேதிகளில் உயிரிழந்த இந்த **15** நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

26.9.2015 அன்று ராமநாதபுரம் மாவட்டம், ராமேஸ்வரத்தைச் சேர்ந்த திரு. சேதுராமலிங்கம் என்பவரின் மகன் வில்வராஜ்;

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், இலுப்பையூரணி கிராமத்தைச் சேர்ந்த திரு. சிவபெருமாள் என்பவரின் மகன் ஸ்ரீகிருஷ்ணா;

அரியலூர் மாவட்டம், சாத்தமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. மருதமுத்து என்பவரின் மகன் பழனிச்சாமி; கோவில் எசனை மேற்கு கிராமத்தைச் சேர்ந்த திரு. பொன்னுசாமி என்பவரின் மனைவி தையமுத்து;

27.9.2015 அன்று மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், செம்புகுடிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. சுரேஷ் என்பவரின் மனைவி திருமதி தனலெட்சுமி மற்றும் அவரின் நான்கு மாத ஆண் குழந்தை;

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், கலிவந்தபட்டு கிராமத்தைச் சேர்ந்த திரு. அர்சுனன் என்பவரின் மகன் விநோத்குமார்;

28.9.2015 விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், நீராவிபட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. கைலாசம் என்பவரின் மகன் வேலாயுதம்;

-- ஆகியோர் பல்வேறு விபத்துகளில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

பல்வேறு நிகழ்வுகளில் மேற்கண்ட தேதிகளில் உயிரிழந்த இந்த **8** நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் ஆணையிட்டுள்ளேன்.

19.10.2015 அன்று சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கருமலைக்கூடல் கிராமம், மேட்டூர் அனல் மின்நிலையத்தில் ஏற்பட்ட விபத்தில் காயமடைந்த ஒப்பந்த தொழிலாளர்கள், மேச்சேரி கிராமத்தைச் சேர்ந்த திரு. அழகேசன், தொட்டில்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. நவநீதகிருஷ்ணன், பி.என். பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. தினேஷ்குமார் ஆகியோருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 50,000/- ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**